**ஜா-எல பிரதேச சபை - 2023**
---------------------------------------------

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஜா-எல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, ஜா-எல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் இலக்கம் 3.28 இன் மற்றும் அதன் பின் இணைப்பு 2 இல் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல்களில் EG 6.2 இற்கு இணங்க செயற்பாட்டுத் தொழிற்பாடுகளின் மூலமான காசுப் பாய்ச்சலை கணிக்கும் போது மிகையுடன் சீராக்கல் செய்யப்பட்டிருந்த ரூபா 180,879,410 தொகைக்கான பெறுமதி எதுவென கணக்காய்விற்கு கண்டறிய முடியாதிருந்தது. மேலும் | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. | குறிப்பிட்ட நியமத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறையல்லாத சொத்துக்களின் வித்தியாசம் ரூபா 28,764,219 தொகையும் மிகையுடன் சீராக்கல் செய்திருந்ததுடன், இருப்புக்களில் குறைவடைதல் ரூபா 23,535,433 தொகையும் குறுகிய காலத்தில் செலுத்த வேண்டியவைகளின் வித்தியாசம் ரூபா 14,734,865 தொகையும் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நியமத்தின் இலக்கம் 3.29 இன் மற்றும் அதன் பின் இணைப்பு 2 இல் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல்களில் EG 6.3 இற்கு இணங்க முதலீட்டுத் தொழிற்பாடுகளின் மூலம் காசுப்பாய்ச்சலை கணிக்கும் போது மீளாய்வாண்டின் ரூபா 50,000,000 தொகைக்கான நிலையான வைப்புக்களின் முதலீடு மற்றும் ரூபா 20,551,782 தொகைக்கான நிலையான வைப்புக்களை விடுவித்து கொள்ளல் கவனத்தில் எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. | குறிப்பிட்ட நியமத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது இயந்திரங்களின் கீழ் மூலதனப்படுத்தப்பட்டிருந்த ரூபா 165,100 தொகை செலவுக்கு சீராக்கல் செய்திருந்ததை சரி செய்யும் போது மீண்டும் செலவுக்கு மற்றும் இயந்திரக் கணக்கிற்கு சீராக்கல் செய்திருந்தமையால் அந்த தொகையினால் செலவுகள் மிகையாகவும் இயந்திரங்களின் பெறுமதி குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது என. | தவறினை சரிசெய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அகல்விரிவான வருமானக் கூற்று தயாரிக்கும் போது மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த மூலதனச் செலவு மானியம் ரூபா 42,375,739 தொகை ஏனைய அகல்விரிவான வருமானத்தின் கீழ் காட்டுவதற்கு பதிலாக 2020 ஆண்டில் கிடைத்திருந்த போதிலும் கணக்கீடு செய்திருக்காத ரூபா 103,452,469 தொகைக்கான மூலதனச் செலவு | ரூபா 103,452,469 தொகை 2023.12.31 திகதி இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்பட்டுள்ளது எனவும் மற்றும் அதன் காரணமாக மொத்தத் தொகையும் ரூபா 145,828,208 தொகையாகும். | - மேற்படி - |

மானியமும் உட்பட ரூபா 145,828,208 தொகை ஏனைய அகல்விரிவான வருமானத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

### 1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுபாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களில் 2 கணக்கு மீதிகளிடையே ரூபா 10,466,481 இற்கான இணக்கஞ் செய்யப்படாத வித்தியாசமொன்று காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. | வித்தியாசத்திற்கான காரணங்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 திகதியிலுள்ளவாறு காசேட்டு மீதியும் அத் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றில் சரி செய்யப்பட வேண்டிய காசு மீதியிடையே ரூபா 1,268,062 இற்கான இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பாக இனங்காணல் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதியை விரைவாக சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை<br>ரூபா. | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (i) | கம்பஹா தனியார் பஸ் கம்பனி | 31,690 | அட்டவணைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு | குறிப்பிட்ட பதிவேடுகள் சரி செய்வதற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது என. | குறிப்பிட்ட அட்டவணையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | சொத்துக்கள் விற்பனைக் கணக்கு | 3,138,130 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) | தலைவரின் உத்தியோகபூர்வ வாகனம் | 10,403 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (iv) | தண்டப் பணக் கணக்கு | 27,282 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (v) | நிலுவை மின்சாரக் கட்டணக் கணக்கு | 2,193,449 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (vi) | ஊழியர் பிணைக் கணக்கு | 15,000 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (vii) | பெற வேண்டிய கைத்தொழில் வரி | 29,015 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (viii) | ஏனைய நிலுவை வருமானங்கள் | 857,787 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (ix) | முற் கொடுப்பனவுகள் | 944,932 | அட்டவணைகள் | -மேற்படி- | -மேற்படி- |
| (x) | தொங்கல் கணக்கு | 236,425 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் VII ஆவது அத்தியாயத்தின் பந்தி 38(2) | நிதிக் கட்டுப்பாட்டுக்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுகின்றது எனவும், அந்த முறைமையை தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதன்படி முறைமை வெற்றிகரமாக நடாத்திச் செல்லப்படுவதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிறைவேற்றப்பட வேண்டிய எழுத்துமூல மீளாய்வொன்றின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் அதனை முறைப்படுத்துவதற்காக தேவையான வித்தியாசங்களும் மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக உரிய அறிக்கைகள் உங்கள் கவனத்திற்கு எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட சட்டத்தின் படி செயற்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 108,925,589 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 22,041,963 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| வீதவரி மற்றும் வரி | 56,892 | 67,148 | 81,695 | 31,024 | 54,643 | 57,370 | 61,263 | 32,925 |
| வாடகை | 23,174 | 22,944 | 20,468 | 38,671 | 28,130 | 22,137 | 11,299 | 36,195 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,067 | 1,748 | 1,748 | - | 1,324 | 1,324 | 1,324 | - |
| ஏனைய வருமானங்கள் | 730 | 200 | 163 | 50 | 780 | 50 | 38 | 13 |
| | 81,863 | 92,040 | 104,074 | 69,745 | 84,877 | 80,881 | 73,924 | 69,133 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் மொத்த மதிப்பீட்டு வருமானத்தில் 112 சதவீதம் சிட்டையிடப்பட்டிருந்தமையால் மற்றும் மொத்த மதிப்பீட்டு வருமானத்தில் 127 சதவீதம் சேகரிக்கப்பட்டிருந்தமையால் மொத்த வருமான மதிப்பீடு தயாரித்தல் தத்ரூபமாக காணப்படவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு முடியும் என. | சரியான வருமானப் பெறுமதி மதிப்பீடு செய்தல் மற்றும் சிட்டையிடல் மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | கந்தான கடை கட்டிடத் தொகுதியில் உரிய முறையில் கொடுப்பனவு செய்திருக்காத 32 கடையறைகள் 03 மாதங்கள் முதல் 47 மாதங்கள் வரையான காலவீச்சில் நிலுவையாக காணப்பட்ட வாடகையின் கூட்டுத்தொகை ரூபா 2,049,135 | மீதித் தொகையை அறவீடு செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | | |
| (இ) | ராகம பொதுச் சந்தை கட்டிடத் தொகுதியில் 14 கடையறைகளில் இருந்து அறவீடு செய்யப்பட வேண்டிக் காணப்பட்ட 2 மாதங்களுக்கும் 39 மாதங்களுக்கும் இடைப்பட்ட ரூபா 3,947,680 இற்கான நிலுவைக் கடை வாடகை அறவீடு செய்வதற்கு அல்லது அந்தக் கடையறைகளை மீண்டும் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் 49 கடையறைகள் 3 மாதம் முதல் 39 மாதம் வரையான நிலுவைத் தொகை ரூபா 13,324,216 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | கடைவாடகை செலுத்தாத வாடகையாளர் 35 பேருக்கு கோரிக்கை பத்திரம் அனுப்பப்பட்டுள்ளது எனவும் மற்றும் ஏனைய கடை உரிமையாளர்களின் நிலுவையை தவணைகளாக செலுத்தப்பட்டு வருகின்றது என. | -மேற்படி- |
| (ஈ) | 2023 ஆண்டிற்காக கைத்தொழில் வரி வியாபார வரியின் கீழ் ஆதனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் படி பிரதேச சபையின் நிதி நிருவாகக் கணக்கு அலுவல்கள் தொடர்பான விதி 296 மற்றும் 297 இன் படியான தகவல்கள் உள்ளடங்கிய கணிப்பீட்டு அறிக்கை தயாரித்திருக்கவில்லை. | 2024 ஆண்டின் அனுமதிப்பத்திரக் கணிப்பீட்டிற்கு அந்த தகவல்களை உட்படுத்துதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | விதிகளுக்கு இணங்க கணிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | ராகம, நிவந்தம மற்றும் உரிய அதிகாரப் பிரதேசங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த விளம்பர அறிவித்தல் தொடர்பான கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டின் விளம்பர அறிவித்தல் கட்டணம் அறிக்கையில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தினால் சாட்டப்பட்ட கருமங்களை நிறைவேற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தன்டுகம உப அலுவலகத்தினால் உடல்விருத்தி நிலையத்தின் அங்கத்துவத்தில் இருந்து கட்டணம் அறவீடு செய்வதற்காக துணைச் சட்டங்கள் தயாரித்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | துணை சட்டங்கள் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | தன்டுகம உப அலுவலகத்தினால் 2023 ஒக்தோபர் 31 திகதி வரை ரூபா 1,705,450 இற்கான குப்பை வரி வருமானமொன்று பெற்றிருந்த போதிலும் அதிகாரப் பிரதேசத்தில் வியாபார அலுவல்கள் | 2024 ஆண்டின் போது கணிப்பீடொன்றின் மூலம் இனங்கண்டு குப்பை வரி விதிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என. | வர்த்தக அலுவல்கள் மேற்கொள்ளும் அனைத்து நிறுவனங்கள் தொடர்பாகவும் கணிப்பீடொன்று மேற்கொண்டு குப்பையை சேகரிப்பதற்காக குறிப்பிட்ட நிறுவனங்களுடன் |

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மேற்கொள்ளும் அனைத்து நிறுவனங்கள் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொண்டு குப்பைகளை சேகரிப்பதற்காக குறிப்பிட்ட நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளுக்கு அணுகியிருக்கவில்லை. | | உடன்படிக்கைகளுக்கு அணுகுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 மற்றும் 2019 ஆண்டுகள் முதல் ஜா-எல பிரதேச செயலகத்திலிருந்து பெற வேண்டிக் காணப்பட்ட ரூபா 716,231 தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | அறவிடப்பட வேண்டிய பெறுவனவுகள் அனைத்தையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2022 ஜனவரி 27 ஆந் திகதிய இலக்கம் 2264/18 கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் ''ஈ'' பகுதியின் படி 2023 ஆண்டிற்கான சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய நிறுவனங்களுக்காக கணிப்பீடொன்று மேற்கொண்டிருக்காததுடன், சுற்றாடல் அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்த பின்னர் மீண்டும் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காத 92 நிறுவனங்கள் காணப்பட்டது. | 2024 ஆண்டிற்குரிய கணிப்பீட்டிற்காக இந்த நிறுவனங்களை இனங்காணல் மேற்கொள்ளப்படும் என. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய நிறுவனங்களுக்காக கணிப்பீடொன்று மேற்கொண்டு நிறுவனங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ராகமையில் அமைந்துள்ள வாகனத் தரிப்பிடத்தை வாடகைக்கு கொடுப்பதற்காக ரூபா 702,000 இற்கான குறைந்த டென்டர் தொகைக்கு உடன்படிக்கை மேற்கொள்ள வேண்டுமென விலைகூறல்தாரருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் பின்னர் மீண்டும் ரூபா 200,000 இற்கான வருடாந்த தொகையொன்றிற்காக விலைகூறல்தாரர்களிடம் உடன்படிக்கை மேற்கொண்டிருந்தமையால் குறைந்த கூறுவிலைத் தொகையுடன் இணக்கஞ் செய்த போது ரூபா 502,000 தொகையினை இழந்திருந்தது. | குறைந்த கூறுவிலைக்கு அண்மித்த பெறுமதி ஒன்றேனும் கிடைத்திருக்கவில்லை என. | அரசாங்க பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதிக்கு வாடகைக்கு கொடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 ஆண்டிற்காக ராகம வாராந்த சந்தை வாடகைக்கு கொடுப்பதற்கான டென்டர் அழைத்தல் மேற்கொள்ளப்படாமல் சபைத் தீர்மானம் ஒன்றின் மூலம் பழைய வாடகையாளருக்கே இந்த ஆதனங்களை குத்தகை அடிப்படையில் வழங்கியிருந்த போதிலும் உடன்படிக்கையொன்று மேற்கொண்டிருக்காததுடன் 2019 ஆண்டு வரை அந்த வாடகையாளரிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 3,902,730 இற்கான தொகையொன்று மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வாடகைத் தொகையை எதிரீடு செய்யும் படி பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியை குறைத்துத் தருமாறு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என. | நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2021 ஆண்டிற்கான டென்டர் தாரர்களே உடன்படிக்கை மேற்கொள்ளப்படாமல் நடாத்திச் செல்லப்படுகின்ற ராகம 02 இறைச்சிக் கடைகள் மற்றும் கந்தான இறைச்சிக் கடை 2023 ஆகஸ்ட் 08 திகதியின் பின்னர் சீல் வைப்பதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு செய்ய முடியாமல் இருந்தது. | பொதுக் கூட்டத்தில் அங்கீகாரத்தின் மீது அனைத்து இறைச்சிக் கடை டென்டர்களும் இரத்துச் செய்யப்பட்டது என. | உடன்படிக்கை காணப்படாத இறைச்சிக் கடைகளை சபைக்கு உரித்தாக்கி மீண்டும் டென்டர் வழங்கி உடன்படிக்கை மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | டென்டரில் வழங்கியிருந்த 05 ஆதனங்கள் தொடர்பாக 2023 ஆண்டிற்காக ரூபா 2,128,375 தொகையும் சபைக்கு சொந்தமாக காணப்படும் மூன்று இறைச்சிக் கடைகளின் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக ரூபா 2,777,437 தொகையும் நிலுவைத் தொகையை அறவீடு செய்திருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அனுப்பப்பட்டுள்ளது என. | நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.3.2 (ஆ) மற்றும் (இ), 2.4.1, 2.6.1(அ)(ii), 2.11.1(ஆ), 2.12(அ), 2.14.1, 4.2.2(ஆ), 5.6.1(அ) மற்றும் (இ) ஆகிய வழிகாட்டல்கள் மற்றும் பெறுகைக் கருமங்கள் கோவையின் 7.11.1 இற்கு முரணாக சீ.சீ.டீ.வீ கெமரா முறைமையொன்று பொருத்துவதற்காக ரூபா 2,071,090 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணக்க செயற்பட வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2023 ஆண்டின் போது ரூபா 54,736,687 தொகைக்கான 18 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த செயற்திட்டங்கள் தொடர்பான உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 3 இன் கீழ் செயற்திட்ட காலம் காட்டப்பட்டிருக்காமையால் ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் உரிய காலப் பகுதியில் நிறைவேற்றப்பட்டனவா என உறுதிப்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது. | அவ்வாறான சந்தர்ப்பங்கள் இனிமேல் சரியாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிபந்தனைகள் சரியாக நிறைவேற்றப்பட வேண்டும். |

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் பதவியணி விபரத்தின் படி 5 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலவீச்சு முதல் 11 பதவிகள் தொடர்பான 31 பேருக்கான பதவியணி வெற்றிடங்கள் காணப்பட்டது. | தற்போது இந்த வெற்றிடங்களுடன் சபையின் அலுவல்களை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நாளாந்த கடமையின் செயற்திறனுக்கு சேதம் ஏற்படாதவாறு கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் மூலம் அந்த கடமைகளை அணவல் செய்தல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |